உ

தாயுமான சுவாமிகள்

# திருப்பாடற்றிரட்டு

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

தொகுத்தது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
5-SEP 1927
MADRAS

வெளியிடுவோர்:

வாவிள்ள

இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,

292, எஸ்பிளனேட், சென்னை.

1927

Printed at
the 'VAVILLA' PRESS
MADRAS.

97159.

# பாயிரம்.

தாயுமானவர் அருளிச்செய்த திருப்பாடல்கள் உயிரை உருக்கும் தன்மை வாய்ந்தவை; வடமொழிச் சொற்களை மிகுதியும் கொண்டவை; சிவஞானம் பழுத்தொழுகு சைவசித்தாந்த சாத்திரப்பொருளைத் தன்னகத்தே மிளிர்ப் பெற்றவை; உயிரின் தன்மையையும் கடவுளின் அருளையும் பலபடியானும் மிகுத்துரைப்பவை; எத்தகையோர் மனத்தையும் கொள்ளை கொள்ளத்தக்க இனிமையுடையவை. இவர் கருத்தையே முற்றும் இராமலிங்கசுவாமிகள் தமது பாடல்களில் அமைத்திருக்கிறார். இராமலிங்கசுவாமிகளைத் தாயுமானவர் மாணுக்கரென ஒருவகையிலே கூறலாம்.

தாயுமானவர் திருமறைக்காட்டிலே வேளாளர் குலத்திலே ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முன் **கேடிலியப்ப பிள்ளை** என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். இவர் திரிசிராமலையிலே வீற்றிருந்தருளும் தாயுமானேசுவரர் திருவருளால் பிறந்தமையான் இவருக்கு அவர் பெயர் சூட்டப்பட்டது. இவர் செந்தமிழ்ப் புலமையும் வடமொழிப்புலமையும் வாய்ந்தவர். இளமையிலேயே பக்திரசம் சொட்டும் தேவாரதிருவாசகத் திருப்பாக்களை ஓதியுணர்ந்தும், சைவசித்தாந்த சாத்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தும் உலகத்தை வெறுத்து உண்மை யறிய அவாவி யிருந்தனர்; தெய்வத்திருவருளால் மௌனகுரு தோன்றிச் சிவஞான சித்தியாரை உபதேசிக்க உடனே உண்மையறிவு தலைகூடப் பெற்றார். பின்னர் வலியவந்த அரசயோகத்தையும் பெண்ணின்பத்தையும் அறவே வெறுத்துத் துறவு பூண்டொழுகினார். இவர் நிட்டை கூடியிருந்த காலத்து அதனை யறியாத அரசன் அவர் இறந்தாரென வெண்ணி அவருடலைத் தீயிலிட்டானெனவும், அத்தீப் பற்றி எரிகையில் சுவாமிகள் நிட்டை கலையப்பெற்றுத் திருவருட்செயலை நினைந்து உயிர் துறந்தாரெனவும் கூறுவர்.

இவர் சைவசித்தாந்தி என்பது வெளிப்படையாக இவர் பாட்டுக்கள் பலவற்றிலும் இனிது விளங்கிக் கிடப்பவும் ஒரு சிலர் இவரை ஏகான்மவாதி என்றும் வேறு சிலர் சமரச ஞானி என்றுங் கூறுவர். அன்னார் இவர் பாடல்களை நன்குணராதவர் என்பதற்கு ஐயமில்லை. சிவஞானபோதம் சித்தியார் முதலிய நூல்களின் அரிய கருத்துக்கள் பலவற்றையும் இவர் பாடல்கள்கொண்டு திகழ்வதையும் ஏகான்மவாதக்கொள்கைக்குக் கண்டனமான பாகங்கள் பல இவர் பாக்கள் பெற்றிருப்பதையும் அவர் நோக்கினரில்லை.

மெய்கண்டார் முதலிய சைவசந்தான குரவர்கட்கும் சமயகுரவர்கட்கும் இவர் வணக்கம் கூறுவதையும் நோக்கிற்றிலர்; மௌனகுருவைத் திருமூலர் மரபிலே தோன்றியவரென வாயாரப் புகழ்ந்து இவர் பாடுதலையும் அறிகிலர்; 'சைவசமயமே சமயம்' என விதந்தோதியதையும் எண்ணிலர்.

இவர் கூறிய மோனசமரசம் சைவசித்தாந்த நூல்களால் நன்கு விளக்கப்பட்ட தொன்றே. வேதாந்த சித்தாந்த சமரசம் என வரும் இடங்களிலெல்லாம் அவர் வேதாந்தம் எனக் குறிப்பது உபநிடதங்களை என அறிதல் வேண்டும். துவைதக்கொள்கைக்கும் இடம் இன்னதென்றும் அதனால் விளையும் பயன் இன்னதென்றும் சுவாமிகள் புலப்படுத்தியுள்ளார்.

தாயுமானவர் பாடல் அறிவுடையார்க்கு ஆராவமுதம் போன்றது; துன்பந் துடைத்து இன்பந் தருவது; அருளறத்தைப் பசுமரத்தாணி அறைந்தாற்போல உள்ளத்திலே பதிய வைப்பது. இத்தகைய பாடல்களுள் சிலவற்றை ஆய்ந்து தொகுத்துள்ள இது யாவருக்கும் மிக்க விழுப்பயனைத் தருமென நம்புகின்றேன்.

இங்ஙனம்,

**மணி. திருநாவுக்கரசு முதலியார்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தாயுமானசுவாமிகள் பாடல்

## திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டனவெலா மோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம். (1)

ஊரனந்தம் பெற்ற பேரனந்தஞ் சுற்று
முறவனந்தம் வினையினு
லுடலனந்தஞ் செய்யும் வினையனந்தங் கருத்
தோவனந்தம் பெற்றபேர்
சீரனந்தஞ் சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்தபேதந்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னுன்ஞான
சிற்சத்தி யாலுணர்ந்து
காரணந்தங் கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும்விண் ணுந் தேக்கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரியவடிவைப்
பேரனந்தம் பேசி மறையனந்தஞ் சொலும்
பெரியமௌனத்தின் வைப்பைப்
பேசரு மனந்தபத ஞான வானந்தமாம்
பெரியபொருளைப் பணிகுவாம். (2)

அத்துவித வத்துவைச் சொற்பிரகாசத் தனியை
யருமறைகண் முரசறையவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
வாதியை யனுதியேக
தத்துவ சொரூபத்தை மதசம் மதம்பெருச்
சாலம்ப ரகித மான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோம நிலையை
நித்தநின் மலசகித நிஷ்ப்ரபஞ்சப் பொருளை
நிர்விஷய சுத்த மான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சய நிராம யத்தைச்

சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோம யத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலி செய்வாம். (3)

## பரிபூரணானந்தம்

வாசா கயிங்கரிய மன்றியொரு சாதன
மனோவாயு நிற்கும்வண்ணம்
வாலாய மாகவும் பழகியறியேன் துறவு
மார்க்கத்தி னிச்சைபோல
நேசானு சாரியாய் விவகரிப்பே னந்த
நினைவையு மறந்தபோது
நித்திரைகொள்வேன் றேக நீங்குமென வெண்ணிலோ
நெஞ்சந் துடித்தயருவேன்
பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே
பேய்க்குண மறிந்திந்த நாய்க்குமொரு வழிபெரிய
பேரின்ப நிட்டையருள்வாய்
பாசா டவிக்குளே செல்லா தவர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (1)

தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பனமுதற்
றேகங்க ளத்தனையு மோகங்கொள் பௌதிகஞ்
சென்மித்த வாங்கிறக்கும்

விரிவாய பூதங்க ளொன்றோடொன் ருயழியு
மேற்கண்ட சேடமதுவே
வேறுவெளி நிராலம்ப நிறைசூன்ய முபசாந்த
வேத வேதாந்தஞானம்
பிரியாத பேரொளி பிறக்கின்ற வருளருட்
பெற்றோர்கள் பெற்றபெருமை
பிறவாமை யென்றைக்கு மிறவாமை யாய்வந்து
பேசாமை யாகுமெனவே
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
பரிபாக காலமலவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (2)

ஆராயும் வேளையிற் பிரமாதி யானாலு
மையவொரு செயலுமில்லை
யமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ராமென விருந்தபேரும்
நேராக வொருகோப மொருவேளை வரவந்த
நிறைவொன்று மில்லாமலே
நெட்டுயிர்த் துத்தட் டழிந்துளறு வார்வசன
நிர்வாக ரென்றபேரும்
பூராய மாயொன்று பேசுமிட மொன்றைப்
புலம்புவார் சிவராத்திரிப்
போதுதுயி லோமென்ற விரதியரு மறிதுயிற்
போலேயிருந்து துயில்வார்
பாராதி தனிலுள்ள செயலெலா முடிவிலே
பார்க்கினின் செயலல்லவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (3)

பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்
பொறிபுல னடங்குமிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
போனவிட மென்பர்சிலபேர்
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்கருதி
நாடிலரு வென்பர்சிலபேர்
பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர்சிலர்
பேசினரு ளென்பர் சிலபேர்
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர்சிலர்
பிறவுமே மொழிவரிவையாற்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலாற்
பரமசுக நிஷ்டைபெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே (4)

அந்தகா ரத்தையோ ரகமாக்கி மின்போலென்
னறிவைச் சுருக்கினவரா
ரவ்வறிவு தானுமே பற்றினது பற்று
யழுந்தவுந் தலைமீதிலே
சொந்தமா யெழுதப் படித்ததார் மெய்ஞ்ஞான
சுகநிஷ்டை சேராமலே
சோற்றுத் துருத்தியைச் சதமெனவு முண்டுண்டு
தூங்கவைத் தவரார்கொலோ
தந்தைதாய் முதலான வகிலப்ர பஞ்சந்
தனைத்தந்த தெனதாசையோ
தன்னையே நோவனோ பிறரையே நோவனோ
தற்கால *மெதைநோவனோ

*மதை நோவனோ என்றும் பாடமுண்டு.

பந்தமா னதுதந்த வினையையே நோவனே
பரமார்த்த மேதுமறியேன்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந்தமே. (5)

ஆழாழி கரையின்றி நிற்கவிலையோ கொடிய
வாலமமு தாகவிலையோ
வக்கடலின் மீதுவட வனனிற்க வில்லையோ
வந்தரத் தகிலகோடி
தாழாம னிலைநிற்க வில்லையோ மேருவுந்
தனுவாக வளையவிலையோ
சப்த மேகங்களும் வச்ரதர னாணையிற்
சஞ்சரித் திடவில்லையோ
வாழாது வாழவே யிராமனடி யாற்சிலையு
மடமங்கை யாகவிலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ
பாழான வென்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக்கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந்தமே. (6)

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல்லாங் கட்டி
யாளினும் கடன்மீதிலே
ஆணைசெல வேநினைவ ரளகேச னிகராக
வம்பொன்மிக வைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்

நிலையாக வேயினுங் காயகற்பந் தேடி
　　நெஞ்சுபுண் ணவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
　　உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுநா னெனக் குளறியே
　　யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
　　பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
　　பரிபூர ணனந்தமே. (7)

## பொருள் வணக்கம்

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய்
　　நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரிய
　　சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
　　மனவாக் கெட்டாச் [ளியைச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெ
　　சிந்தை செய்வாம். (1)

யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி
　　யாதின் பாலும்
பேதமற நின்றுயிர்க் குயிராகி ரன்பருக்கே
　　பேரா னந்தக்

கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்
கொடுத்துக் காட்டுந் [னைக்
தீதிலபரா பரமான சிந்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம். (2)

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்வற
தன்மை நாம [நின்
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவற
நியக்கஞ் செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம். (3)

பொருளாகக் கண்டபொரு ளெவைக்குமுதற் பொரு
போத மாகித் [ளாகிப்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த
செழுந்தே னாகி
யருளானோர்க் ககம்புறமென் றுன்னாத பூரணவா
னந்த மாகி
யிருடீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையா
மிறைஞ்சி நிற்பாம். (4)

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா முனி
ராதி யானோர் [வர்சித்த
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற் பனைகடந்த
செல்வமாகிக்
கருதரிய மலரின்மண மெள்ளிலெண்ணெயுட லுயிர்
கலந்தெந் நாளுந் [போற்
துரியநடு வூடிருந்த பெரியபொரு ளியாததனைத்
தொழுதல் செய்வாம். (5)

அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்துமாகிப்
பகர்வனவெல் லாமாகி * யல்ல வாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்களெல்லாந்
தோயாத வறிவாகிச் சுத்தமாகி
நிகரில்பசு பதியான பொருளைநாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பா னினைதல் செய்வாம்.

---

## சின்மயானந்தகுரு

### பன்னிரு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
வன்பினு லுருகிவிழிநீர்
ஆறுக வாராத முத்தியின தாவேச
வாசைக் கடற்கண்மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி
தழுதழுத் திடவணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தன்னருள் கொடுத்தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்க
டொழுதருகில் வீற்றிருப்ப
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே
சொருபானு பூதிகாட்டிச்

---

* அல்லதாகி என்றும் பாடமுண்டு.

செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணு மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (1)

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனு
ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதிநூலையும் வகுத்துச்
சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ யுன்னைநா னணுகவுந்
தண்ணருள் வகுக்கவிலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணுத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவிற்
போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணு மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (2)

ஐந்துவகை யாகின்ற பூதபே தத்திஞ
லாகின்ற வாக்கைநீர்மே
லமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநா
னறியாத காலமெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போந்தநெறி யென்றிருந்தேன்
பூராய மாகநின தருள்வந் துணர்த்தவிவை
போனவழி தெரியவில்லை

யெந்தநிலை பேசினு மிணங்கவிலை யல்லா
விறப்பொடு பிறப்பையுள்ளே
யெண்ணினு னெஞ்சது பகீரெனுந் துயிலுரு
திருவிழியு மிரவுபகலாய்ச்
செந்தழலின் மெழுகான தங்கமிவை யென்கொலோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (3)

காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட்டு தற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டடருற வுறுக்கியிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்து துயில் கொண்மினென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (4)

கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
களிம்புதோய் செம்பனையயான்

காண்டக விருக்கநீ ஞானவனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளுருக்கிப்
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற்றுத் தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை யென்சொல்லுவே
னருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த
மாதியா மந்தமீது
மத்துவித நிலையரா மென்னையாண் டுன்னடிமை
யானவர்க ளறிவினூடுந்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (5)

## மௌனகுரு வணக்கம்

கல்லாத வறிவுமேற் கேளாத கேள்வியுங்
கருணைசிறி தேதுமில்லாக்
காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாய்க்
காதலித் திடு நெஞ்சமும்
பொல்லாத பொய்ம்மொழியு மல்லாது நன்மைகள்
பொருந்துகுண மேதுமறியேன்
புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருஷார்த்த மேதுமில்லே
னெல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
கெவ்வண்ண முய்வண்ணமோ

விருளையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறு
மெனக்குநின் னருடாரகம்
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தேயிந்த
வஞ்சகனை யாளநினையாய்
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே. (1)

கானக மிலங்குபுலி பசுவொடு குலாவுநின்
கண்காண மதயானைநீ
கைகாட்டவுங் கையா னெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக வேந்திவருமே
போனக மமைந்ததென வக்காம தேனுநின்
பொன்னடியி னின்றுசொலுமே
புவிராசர் கவிராசர் தவராச னென்றுனைப்
போற்றிசய போற்றியென்பார்
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களுமுன்
னட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதன்
ஞானிகளு முனைமெச்சுவார்
வானகமு மண்ணகமும் வந்தெதிர வணங்கிடுமுன்
மகிமையது சொல்லவெளிதோ
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே. (2)

ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
வாணவத் தினும்வலி துகா
ணறிவினை மயக்கிடு நடுவறிய வொட்டாதி
யாதொன்று தொடினுமதுவாய்த்
தாங்காது மொழிபேசு மரிகரப் பிரமாதி
தம்மொடு சமானமென்னுர்

தடையற்ற தேரிலச் சுருவாணி போலவே
தன்னிலசை யாதுநிற்கு
மீங்கா ரெனக்குநிக ரென்னப்ர தாபித்
திராவண காரமாகி
யிதயவெளி யெங்கணுந் தன்னரசு நாடுசெய்
திருக்குமித னொடெநேரமும்
* வாங்கா நிலாதடிமை போராட முடியுமோ
மௌனோப தேசகுருவே
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே. (3)

## கருணாகரக் கடவுள்

எல்லாமு னடிமையே யெல்லாமு னுடைமையே
எல்லாமு னுடையசெயலே
யெங்கணும் வியாபிநீ யென்றுசொலு மியல்பென்
றிருக்காதி வேதமெல்லாஞ்
சொல்லான் முழக்கியது மிக்கவுப காரமாய்ச்
சொல்லிறந் தவரும்விண்டு
சொன்னவையு மிவைநல்ல குருவான பேருந்
தொகுத்த நெறி தானுமிவையே
யல்லாம லில்லையென நன்று வறிந்தே
னறிந்தபடி நின்றுசுகநா
னுகாத வண்ணமே யிவ்வண்ண மாயினே
னதுவுநின தருளென்னவே

* வாங்கா விலாவடிமை என்றும் பாடமுண்டு

கல்லாத வறிஞனுக் குள்ளே யுணர்த்தினை
கதிக்குவகை யேதுபுகலாய்
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. (1)

பண்ணேனு னக்கான பூசையொரு வடிவிலே
பாவித் திறைஞ்சவாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பனிமல ரெடுக்கமனமு
நண்ணேனலாமலிரு கைதான் குவிக்கவெனி
ணுணுமென் னுளநிற்றிநீ
நான்கும் பிடும்போ தரைக்கும்பி டாதலா
ளுன்பூசை செய்யன்முறையோ
விண்ணே விண்ணுதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே யவித்தின்முளையே
கண்ணே!கருத்தே யெனெண்ணே யெழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே. (2)

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
துஷ்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையா முனக்கே
தொழும்பனன் பபிஷேகநீ
ருள்ளுறையி லென்னுவி நைவேத்தி யம்பிராண
ணேங்குமதி தூபதீப
மொருகால மன்றிது சதாகால பூசையா

வொப்புவித் தேன்கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே
தெளிந்ததேனே சீனியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத வானந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லவுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே. (3)

உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றென வெதும்பியூற்ற
வூசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னியுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக் கூப்பி
வானேய வானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத் துங்
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளியையோ
கருதசரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே. (4)

# சித்தர்கணம்

திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே
சென்றோடி யாடிவருவீர்
செம்பொன்மக மேருவொடு குணமேரு வென்னவே
திகழ்* துருவ னளவளாவி
யுக்ரமிகு சக்ரதர னென்னநிற் பீர்கையி
லுழுந்தமிழு மாசமனமா
வோரேழு கடலையும் பருகவல் லீரிந்த்ர
னுலகுமயி ராவதமுமே
கைக்கெளிய பந்தா வெடுத்துவிளை யாடுவீர்
ககனவட் டத்தையெல்லாங்
கடுகிடை யிருத்தியே யஷ்டகுல வெற்பையுங்
காட்டுவீர் மேலுமேலு
மிக்கசித் திகளெல்லாம் வல்லநீ ரடிமைமுன்
விளங்கவரு சித்தியிலையோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (1)

பாட்டளி துதைந்துவளர் கற்பகந னீழலைப்
பாரினிடை வரவழைப்பீர்
பதுமநிதி சங்கநிதி யிருபாரி சத்திலும்
பணிசெயுந் தொழிலாளர்போற்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர்பிச்சை
கேட்டுப் பிழைப்போரையுங்
கீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமொரு
கேணியிடை குறுகவைப்பீ
ரோட்டினை யெடுத்தா யிரத்தெட்டு மாற்றாக
வொளிவிடும் பொன்னாக்குவீ

* துருவமளவளாவி என்றும் பாடமுண்டு.

ருரகனு மிளைப்பாற யோகதண் டத்திலே
யுலகுசுமை யாகவருளான்
மீட்டிடவும் வல்லநீ ரென்மனக் கல்லையனன்
மெழுகாக்கி வைப்பதரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (2)

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
னியாதினு மரிதரிதுகா
ணிப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
வேதுவரு மோவறிகிலேன்
கண்ணகனிலத்துநா னுள்ளபொழு தேயருட்
ககனவட் டத்தினின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்ததேகப்
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவித னருளினலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டுவே னுமதடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (3)

கன்னலமு தெனவுமுக் கனியெனவும் வாயூறு
கண்டெனவு மடியெடுத்துக்
கடவுளர் கடந்ததல வழுதழுது பேய்போற்
கருத்திலெழு கின்றவெல்லா

மென்னதறி யாமையறி வென்னுமிரு பகுதியர்
        வீட்டுதமி ழென்றமிழினுக்
கின்னல்பக ராதுலக மாராமை மேலிட்
        டிருத்தலா லித்தமிழையே
சொன்னவ னியாவனவன் முத்தசித் திகளெலாந்
        தேய்ந்தநெறி யேபடித்தீர்
சொல்லுமென வவர்நீங்கள் சொன்னவவை யிற்சிறிது
        தோய்ந்தகுண சாந்தனெனவே
மின்னல்பெற வேசொல்ல வச்சொல்கேட் டடிமைமன
        விகசிப்ப தெந்தநாளோ [ம்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
        வித்தகச் சித்தர்கணமே. (4)

கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள்
        கற்றுமறி வில்லாதவென் [கேன்
கர்மத்தை * யென்சொல்கேன் மதியையென் சொல்லு
        கைவல்ய ஞானநீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
        நாட்டுவேன் கன்மமொருவ
னுட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
        நவிலுவேன் வடமொழியிலே
வல்லா னொருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
        வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
        வசனங்கள் சிறிதுபுகல்வேன்

---

* யென் சொல்லுவேன் மதியை யென் சொல்லுவேன் என்றும் பாடமுண்டு.

வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைதந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (5)

---

## ஆனந்தமானபரம்

கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குணமொன்று மொன்றிலேன்பாற்
கோரமெத் தனைபக்ஷ பாதமெத்த னைவன்
குணங்களெத் தனைகொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை
கதிக்கென்ற மைத்தவருளிற்
செல்லாமை யெத்தனை விர்தாகோஷ்டி யென்னி
செல்வமெத் தனைமுயற்சி [லோ
சிந்தையெத் தனைசலன மிந்த்ரஜா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலா
யல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
யானேனி வைக்குமாளோ
வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (1)

மாறுபடு தர்க்கந் தொடுக்கவறி வார்சாண்
வயிற்றின் பொருட்டதாக
மண்டலமு விண்டலமு மொன்றாகி மனதுழல
மாலாகி நிற்கவறிவார்

வேறுபடு வேடங்கள் கொள்ளவறி வாரொன்றை
மெணமெணன் றகம்வேறதாம்
வித்தையறி வாரெமைப் போலவே சந்தைபோன்
மெய்ந்நூல் விரிக்கவறிவார்
சீறுபுலி போற்சீறி மூச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்கவறிவார்
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடு முளறவறிவா
ராறுசம யங்கடோறும் வேறுவே ருகிவிளை
யாடுமுனை யாவரறிவா
ரண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (2)

காராரு ம[illegible]ாட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென்னுங்
கல்லைப் பிளந்து நெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திமேன்மேற்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயையவன்
பறவையனு காதவண்ணா
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமென்று
மாராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (3)

எத்தனை விதங்கடான் கற்கினுங்கேட்கினுமென்
னிதயமு மொடுங்கவில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவில்லை
யாதினும் மபிமானமென்
சித்தமிசை குடிகொண்ட தீகையோ டிரக்கமென்
சென்மத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினுந்
தரிசனஞ் * செய்துமறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே
யத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
வவனிமிசை யுண்டோசொல
யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (4)

எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா
வேழைநீ யென்றிருந்திட்
டெனதாவி யுடல்பொருளு மௌனியாய் வந்துகை
யெற்றுநம தென்றவன்றே
பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்
பொய்யுடலை மெய்யென்னலும்
பொய்யுறவு பற்றலும் பொய்யாகு நானென்னல்
பொய்யினும் பொய்யாகையான்
மைக்கா விருட்டனைய விருளில்லை யிருவினைகள்
வந்தேற வழியுமில்லை

---

* கண்டுமறியேன் என்றும் பாடமுண்டு.

மனமில்லை யம்மனத் தினமில்லை வேறுமொரு
வரவில்லை போக்குமில்லை
யக்கால மிக்கால மென்பதிலை யெல்லா
மதீதமய மானதன்றோ
வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (5)

## சுகவாரி

இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதே
னெனருசித் திடவலியவந்
தின்பங் கொடுத்தநினை யென்றேர நின்னன்ப
ரிடையறா துருகிநாடி
யுன்னிய கருத்தவிழ வுரைகுளறி யுடலெங்கு
மோய்ந்தயர்ந் தவசமாகி
யுணர்வரிய பேரின்ப வனுபூதி யுணர்விலே
யுணர்வார்க ளுள்ளபடிகாண்
கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்
கைக்கொள்வள் பக்குவத்திற்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக்
கருதிநகை யாவளதுபோல்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
தோற்றிற் சுகாரம்பமாஞ்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (1)

கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருகவிலையே
கருணைக் கிணங்காத வன்மையையு நான்முகன்
கற்பிக்க வொருகடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்குமுண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிரங்கியெனை
வாழ்விப்ப துன்பரங்காண்
பொல்லாத சேயெனிற் றாய்தள்ள னீதமோ
புகலிடம் பிறிதுமுண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையே னுவனந்தோ
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா விருக்கவருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (2)

என்பெலா நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்பவுட
லிளகமன தழலின்மெழுகா
யிடையறா துருகவரு மழைபோ லிரங்கியே
யிருவிழிக ணீரிறைப்ப
வன்பினான் மூர்ச்சித்த வன்பருக் கங்ஙனே
யமிர்தசஞ் சீவிபோல்வந்
தானந்த மழைபொழிவை யுள்ளன்பி லாதவெனை
யார்க்காக வடிமைகொண்டாய்
புன்புலான் மயிர்தோ னரம்பென்பு மொய்த்திடு
புலைக்குடிலி லருவருப்புப்

பொய்யல்ல வேயிதனை மெய்யென்று நம்பியென்
புந்திசெலு மோபாழிலே
துன்பமா யலையவோ வுலகநடை யையவொரு
சொற்பனத் தினும்வேண்டிலேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (3)

வெந்நீர் பொருதெனுடல் காலின்முட் டைக்கவும்
வெடுக்கென் றசைத்தெடுத்தால்
விழியிமைத் தங்ஙனே தண்ணருளை நாடுவேன்
மற்றொன்றை யொருவர்கொல்வி
னந்நேர மையோவென் முகம்வாடி நிற்பதுவு
மையநின் னருளறியுமே
யானுனு மெத்தப் பயந்தவ னியானென்னை
யாண்டநீ கைவிடாதே
யிந்நேர மென்றிலை யுடற்சுமைய தாகவு
மெடுத்தா விறக்கவென்றே
யெங்கெங்கு மொருதீர்வை யாயமுண் டாயினு
மிறைஞ்சுசுக ராதியான
தொன்னீர்மை யாளர்க்கு மானிடம் வகுத்தவரு
டுணையென்று நம்புகின்றேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (4)

அரும்பொனே மணியேயெனன்பே யெனன்பான
வறிவேயெ னறிவிலூறு
மானந்த வெள்ளமே யென்றென்று பாடினே
னாடினே னாடிநாடி

விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனியா
னிரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
வென்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (5)

அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ
வலரிமண் டலநடுவிலோ
வனனடுவி லோவமிர்த மதிநடுவி லோவன்ப
ரகமுருகி மலர்கட்டுவித்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்
திகந்தத்தி லோவெளியிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ
கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக்
கண்டசூ னியமதனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னிலோ
கருவிகர ணங்களோய்ந்த
தொண்டர்க ளிடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற் குளவுபுகலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (6)

எந்தநாள் கருணைக் குரித்தாகு நாளெனவு
மென்னிதய மெனவாட்டுதே
யேதென்று சொல்லுவேன் முன்னெடுபின் மலைவறவு
மிற்றைவரை யாதுபெற்றேன்
பந்தமா னதில்விட்ட மெழுகாகி யுள்ளம்
பதைத்துப் பதைத்துருகவோ
பரமசுக மாவது பொறுப்பரிய துயரமாய்ப்
பலகாலு மூர்ச்சிப்பதோ
சிந்தையா னதுமறிவை யென்னறிவி லறிவான
தெய்வநீ யன்றியுளதோ
தேகநிலை யல்லவே யுடைகப்பல் கப்பலாத்
திரையாழி யூடுசெலுமோ
சொந்தமா யாண்டநீ யறியார்கள் போலவே
துன்பத்தி லாழ்த்தன்முறையோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (7)

•எந்நாளு முடலிலே யுயிராமுனைப்போ
விருக்கவிலை யோமனதெனு
மியானுமென் னட்பாம் பிராணனு மெமைச்சடம
தென்றுனைச் சித்தென்றுமே
யந்நாளி லெவனோ பிரித்தா னதைக்கேட்ட
வன்றுமுத லின்றுவரையு
மநியாய மாயெமை யடக்கிக் குறுக்கே
யடர்ந்தரசு பண்ணியெங்கண்
முன்னுக நீயென்ன கோட்டைகொண் டாயென்று
மூடமன மிகவுமேச
மூண்டெரியு மனலிட்ட மெழுகா யுளங்கருகன்
முறைமையோ பதினுயிரஞ்

சொன்னாலு நின்னரு ளிரங்கவிலை யேயினிச்
சுகம்வருவ தெப்படிசொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (8)

## எங்கு நிறைகின்ற பொருள்

'அவனன்றி யோரணுவு மசையா' தெனும்பெரிய
வாய்தர்மொழி யொன்றுகண்டா
லறிவாவ தேதுசில வறியாமை யேதிவை
யறிந்தார்க ளறியார்களார்
மௌனமொ டிருந்ததா ரென்போ லுடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார்
மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும்
வன்மையோ டிரக்கமெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்
பூதபே தங்களெவிடம்
பொய்மெயித மகிதமேல் வருநன்மை தீமையொடு
பொறைபொறா மையுமெவ்விட
மெவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞ
ரியாதுமுனை யன்றியுண்டோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (1)

அன்னை யனையெனுஞ் சிலசமய நின்னையே
யையாவை யாவென்னவே
யலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
வலறியே யொன்றுமிலவாய்ப்

பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப்
        பிதற்றிடுஞ் சிலசமயமேற்
பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி
        பிறவுமே நிலயமென்றுந்
தன்னே ரிலாததோ ரணுவென்று மூவிதத்
        தன்மையாங் காலமென்றுஞ்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
        சதாஞான வானந்தமா
யென்னே யெனேகருணை விளையாட் டிருந்தவா
        றெம்மனோர் புகலவெளிதோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
        யெங்குநிறை கின்றபொருளே. (2)

## சச்சிதானந்தசிவம்

இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
        யேங்குதே நெஞ்சமையோ
வின்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
        றெண்ணவோ திடமில்லையே
யனியாயமா யிந்த வுடலைநா னென்றுவரு
        மந்தகற் காளாகவோ
வாடித் திருந்துநான் கற்றதுங் கேட்டது
        மவலமாய்ப் போதனன்றோ
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
        கந்தமூ லங்களேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
        கண்மூடி மௌனியாகித்

தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (1)

## தேசோமயானந்தம்

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசா லக்கோலம்
வஞ்சனை பொருமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யிலாதகனவே
யெந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவுமூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. (1)

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்

வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணும லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொள்ளலாஞ்
சந்ததமு மிளமையோடிருக்கலா மற்றொரு
சரீரத்தினும் புகுதலாஞ்
சலமே னடங்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாஞ்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. (2)

எல்லா மறிந்தவரு மேதுமறி யாதவரு
மில்லையெனு மிவ்வுலகமீ
தேதுமறி யாதவ னெனப்பெயர் தரித்துமிக
வேழைக்கு ளேழையாகிக்
கல்லாத வறிவிற் கடைப்பட்ட நானன்று
கையினு லுண்மைஞானங்
கற்பித்த நின்னருளி னுக்கென்ன கைம்மாறு
காட்டுவேன் குற்றேவனு
னல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறையெயிற்
ருபாச வடிவமான
வந்தகா நீயொரு பகட்டாற் பகட்டுவ
தடாதடா காசுநம்பாற்
செல்லா தடாவென்று பேசவா யதுதந்த
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. (3)

# சிற்சுகோதயவிலாசம்

காக மோடுகழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காமவே ணடன சாலையை
மோக வாசைமுறி யிட்ட பெட்டியைமு
மலமிகுந் தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
முடங்க லார்கிடை சரக்கினை
மாக விந்த்ரதனு மின்னை யொத்திலக
வேத மோதிய குலாலனூர்
வனைய வெய்யதடி காரணை யமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொயை மெய்யெனக் கருதி
யைய வையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சு கோதய விலாசமே. (1)

எவ்வுயிரத் திரளு முலகி லென்னுயி
ரெனக்கு ழைந்துருகி நன்மையா
யிதமு ரைப்பவென தென்ற யாவையு
மெடுத்தெ றிந்துமத யானைபோற்
கவ்வை யற்றநடை பயில வன்பரடி
கண்டதே யருளின் வடிவமாக்
கண்ட யாவையு மகண்ட மென்னவிரு
கைகு வித்துமலர் தூவியே
பவ்வ வெண்டிரை கொடுத்த தண்டரளம்
விழியு திர்ப்பமொழி குளறியே

பாடி யாடியு ளுடைந் துடைந் தெழுது
பாவையொத் தசைத வின்றியே
திவ்ய வன்புருவ மாகி யன்பரொடு
மின்ப வீட்டினி லிருப்பனே
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சு கோதய விலாசமே. (2)

பன்மு கச்சமய நெறிப டைத்தவரு
மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம
தருமனும் பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூடுவளர்
சனக னாதிமுனி வோர்கடஞ்
சொன்ம யக்கமது தீர வங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள
சோம சேகரகிர் பாளுவாய்த்
தென்மு கத்தின்முக மாயிருந்த கொலு
வெம்மு கத்தினும் வணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சு கோதய விலாசமே. (3)

## ஆகாரபுவனம்-சிதம்பரரகசியம்

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
வொளியாகி வெளியாகி யுருவு மாகி
நன்றாகித் தீதாகி மற்று மாகி
நாசமுட னுற்பத்தி நண்ணு தாகி

யின்றாகி நாளையுமாய் மேலு மான
 வெந்தையே யெம்மானே யென்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதா வாகிக்
 கடிதினில்வந் தருள்கூருங் கருணை விண்ணே. (1)

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
 யாரமிர்தே யெண்கண்ணே யரிய வான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
 பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
 காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும் [கேளே.
 விழுப்பொருளே யான்சொல்லும்விண் ணப்பங்
விண்ணவரிந் திரன்முதலோர் நார தாதி
 விளங்குசப்த ருஷிகள்கன் வினை வல்லோ
ரெண்ணரிய சித்தர்மனு வாதி வேந்த
 ரிருக்காதி மறைமுனிவ ரெல்லா மிந்தக்
கண்ணகன்ஞா லம்மதிக்கத் தானே யுள்ளங்
 கையினெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்
திண்ணியநல் லறிவாலிச் சமயத் தன்றோ
 செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா ரென்றும். (2)

செப்பரிய சமயநெறி யெல்லாந் தந்தந்
 தெய்வமே தெய்வமெனுஞ் செயற்கை யான
வப்பரிசா ளருமஃதே பிடித்தா விப்பா
 லடுத்ததந்நூல் களும்விரித்தே யனுமா னாதி
யொப்பவிரித் துரைப்பரிங்ஙன் பொய்மெய் யென்ன
 வொன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வாதார்
இப்பரிசாஞ் சமயமுமா யல்ல வாகி [க்கும்
 யாதுசம யமும்வணங்கு மியல்ப தாகி. (3)

இயல்பென்றுந் திரியாம லியம மாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தி
லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ. (4)

அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின்
றறிஞரெல்லா நடுவறிய வணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கு
மிதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை
சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம். (5)

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானென் றுகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுட னைந்தங் காண்ட லாகும். (6)

வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே யத்துவா மார்க்க நோக்கி
யைந்துபுல னைம்பூதங் கரண மாதி
யடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை

யிந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம். (7)

அதுவென்று லெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
யாதலினு லதுவெனலு மறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக ஞதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்
பதியிந்த நிலையெனவு மென்னை யாண்ட
படிக்குகிரு விகற்பத்தாற் பரமா னந்தக்
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூ ரிந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன். (8)

பாராதி விண்ணனைத்து நீயாச் சிந்தை
பரியமட லாவெழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ வென்ப்ராண நாதா வென்பேன்
வளைத்துவளைத் தெனைநீயா வைத்துக் கொண்டு
பூராய மாமேலொன் றறியா வண்ணம்
புண்ணுளர் போனெஞ்சம் புலம்பி யுள்ளே
நீராள மாயுருகிக் கண்ணீர் சோர [பேன்.
நெட்டுயிர்த்து மெய்ம்மறந்தோர் நிலையாய் நிற் (9)

நேரேதா னிரவுபகல் கோடா வண்ணம்
நித்தம்வர வுங்களையிந் நிலைக்கே வைத்தார்
ஆரேயங் கவர்பெருமை யென்னே யென்பே
னடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்று யென்பேன் வந்து
பெய்கின்ற முகில்காளெம் பெருமா னும்போற்
ருராள மாக்கருணை பொழியச் செய்யும்
சாதகமென் னேகருதிச் சாற்று மென்பேன். (10)

கருதரிய விண்ணேநீ யெங்கு மாகிக்
கலந்தனையே யுன்முடிவின் காட்சி யாக
வருபொருளெப் படியிருக்குஞ் சொல்லா யென்பேன்
மண்ணேயுன் முடிவிலெது வயங்கு மாங்கே
துரியவறி வுடைச்சேட னீற்றி னுண்மை
சொல்லானோ சொல்லென்பேன் சுருதி யேநீ
யொருவரைப்போ லனைவருக்கு முண்மை யாமுன்
னுரையன்றோ வுன்முடிவை யுரைநீ யென்பேன்.

உரையிறந்து பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி
யொலிக்கின்ற கடலேயிவ் வுலகஞ் சூழக்
கரையுமின்றி யுன்னைவைத்தா ரியாரே யென்பேன்
கானகத்திற் பைங்கிளிகாள் கமல மேவும்
வரிசிறைவண் டினங்காளோ திமங்காள் தூது
மார்க்கமன்றோ நீங்களிது வரையி லேயும்
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
பேசியதுண் டோவொருகாற் பேசு மென்பேன்.

ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை
யோட்டுதல்போ லுன்பேதை யுப்போ டப்பை
மருவவிட்டுங் கர்ப்பூர மதனிற் றீபம்
வயங்கவிட்டு மைக்கியமுன்னி வருந்தி நிற்பேன்
அருளுடைய பரமென்றோ வன்று தானே
யானுளனென் றும்மெனக்கே யாண வாதி
பெருகுவினைக் கட்டென்று மென்னுற் கட்டிப்
பேசியதன் றேயருளுல் பேசிற் றன்றே. (12)

## தேன்முகம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வேண்டுவ படைத்தாய் நுந்தை விதிப்படி புரந் தானத்தைக், காண்டக வழித்தான் முக்கட் கடவுடா னினைய வாற்ரு, லாண்டவ னெவனே வென்ன வறிகி லாகில நீயே, யீண்டிய வல்ல நீர வெம்மனோர்க் கிய ம்பு கண்டாய்.

அல்லலாங் தொழில் படைத்தே யடிக்கடி யுரு வெ டுத்தே, மல்லன்மா ஞாலங் காக்க வருபவர் கடவு ளென்னிற், றொல்லையாம் பிறவி வேலை தொலைங் திடா திருணீங் காது, நல்லது மாயை தானு நானென வந்து கிற்கும்.

---

## பன்மாலை

எண்சீர்க் கழிநெடி லடியாசிரிய விருத்தம்

பன்மாலைத் திரளிருக்கத் தமையு ணர்ந்தோர்
பாமாலைக் கேநீதான் பக்ஷமென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னர் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனே னெந்நாளுந் துதித்து கிற்பேன்
என்மாலை யறிந்திங்கே வாவா வென்றே
யெனைக்கலப்பாய் திருக்கருணை யெம்பிரானே.

வாழ்வனைத்து மயக்கமெனத் தேர்ந்தேன் றேர்ந்த
வாறேநா னப்பாலோர் வழிபா ராமற்

சூழ்வுபெற்றிங் கிருந்தேனீ தென்ன மாயந்
தடையுற்றான் மேற்கதியுந் தடைய தாமே
யூழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத் தோவிங்
கொருதமியேன் மேற்குறையோ வுணர்த்தாயின் [னம்
பாழவதிப் படவெனக்கு முடியா தெல்லாம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசி னானே.

குன்றாத மூவுருவா யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்து மாடி
நின்றாயே மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையா ரறியவல்லார் நினைப்போர் நெஞ்சம்
மன்றாக வின்பக்கூத் தாட வல்ல
மணியேயென் கண்ணேமா மருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோன ஞான
மமைத்தசின்முத் திரைக்கடலே யமர ரேறே.

---

## நினைவொன்று

### ஞானிகளிடம்பொருளேவல்

ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கு மந்த வொருமொழியே மலமொழிக்கு மொழிக்குமென மொழிந்த, குருமொழியேமலையிலக்குமற்றை மொழி யெல்லாங் கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய், கருமொழி யிங் குனக்கில்லை மொழிக்கு மொழி ருசிக்கக் கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங்கண் டனைமேற், றருமொழியிங் குனக் கில்லை யுன்னைவிட்டு நீங்காத் தற்பரமா யானந்தப் பொற் பொதுவாய் நில்லே. (1)

---

## ஆரணம்

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

என்செய லின்றி யாவுநின் செயலென்
றெண்ணுவே னெவ்வொரு காலம்
புன்செயன் மாயை மயக்கினென் செயலாப்
பொருந்துவே னஃதொரு காலம்
பின்செயல் யாது நினைவின்றிக் கிடப்பேன்
பித்தனே னன்னிலை பெறநின்
றன்செய லாக முடித்திடல் வேண்டுஞ்
சச்சிதா னந்தசற் குருவே. (1)

---

## சொல்லற்கரிய

### அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சொல்லற் கரியபரம் பொருளே
சுகவா ரிதியே சுடர்க் கொழுந்தே
வெல்லற் கரிய மயலிலெனை
விட்டெங் கொளித்தா யாகெட்டேன்
கல்லிற் பசிய நாருரித்துக்
கடுகிற் பெரிய கடலடைக்கும்
அல்லிற் கரிய வந்தகனார்க்
காளாக் கினையோ வறியேனே. (1)

பேசாவனு பூதியை யடியேன்
பெற்றுப் பிழைக்கப் பேரருளாற்
றேசோ மயந்த் தினியொருகாற்
சித்தத் திருளுந் தீர்ப்பாயோ
பாசாட வியைக் கடந்தவன்பர்
பற்று மகண்டப் பரப்பான

ஈசா பொதுவில் நடமாடு
மிறைவா குறையா வின்னமுதே. (2)

கூறு நின்ற விடாக்கவலைக்
குடும்பக் கூத்துட் டுளைந்துதடு
மாறு நின்ற பாவியைநீ
வாவென் றழைத்தா லாகாதோ
நீறார் மேனி முக்கணுடை
நிமலா வடியார் நினைவினிடை
யாறாய்ப் பெருகும் பெருங்கருணை
யரசே யென்னை யாள்வானே. (3)

கண்டார் கண்ட காட்சியுநீ
காணார் காணாக்கள்வனுநீ
பண்டா ருயிர்நீ யாக்கையுநீ
பலவாஞ் சமயப் பகுதியுநீ
எண்டோண் முக்கட் செம்மேனி
யெந்தாய் நினக்கே யெவ்வாறு
தொண்டாய்ப் பணிவ ரவர்பணிநீ
சூட்டிக் கொள்வ தெவ்வாறே. (4)

சூட்டி யெனதென் றிடுஞ்சுமையைச்
சுமத்தி யெனையுஞ் சுமையாளக்
கூட்டிப் பிடித்து வினைவழியே
கூத்தாட் டினையே நினதருளால்
வீட்டைக் கருது மப்போது
வெளியா முலக வியப்பனைத்தும்
ஏட்டுக் கடங்காச் சொப்பனம்போ
லெந்தா யிருந்த தென்சொல்வேன். (5)

## வம்பனேன்

குறைவிலா நிறைவாய்ஞானக் கோதிலா னந்தவெள்ளத்
துறையிலே படிந்துமூழ்கித் துளைந்துநான் றேன்றுவாறுள்
ளுறையிலே யுணர்த்திமோன வொண்சுடர் வைவாடந்த
விறைவனே யுனைப்பிரிந்திங் கிருக்கிலே னிருக்கிலேனே. (1)

## சிவன்செயல்

சிவன்செய லாலே யாதும் வருமெனத் தேறே னூளும்
அலந்தரு நினைவை யெல்லா மகற்றிலே னுசை வெள்ளங்
கவர்ந்துகொண் டிழுப்ப வந்தக் கட்டிலே யகப்பட் டையோ
பவந்தனை யீட்டி யீட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே. (1)

வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர்
வந்தெனை யீர்த்து வெங்காமத்
தீயிலே வெதுப்பி யுயிரொடுந் தின்னச்
சிந்தைதனைந் துருகி மெய்ம்மறந்து
தாயிலாச் சேய்போ லலைந்தலைப் பட்டேன்
றாயினுங் கருணையா மன்றுள்
நாயக மாகி யொளிவிடு மணியே
நாதனே ஞானவா ரிதியே. (2)

மறமலி யுலக வாழ்க்கையே வேண்டும்
வந்து நின்னன்பர்தம் பணியாம்
அறமது கிடைக்கி னன்றியா னந்தவற்புத
நிட்டையி னிமித்தந்
துறவது வேண்டு மௌனியா யெனக்குத்
தூயநல் லருடரி னின்னம்
பிறவியும் வேண்டும் யானென திறக்கப்
பெற்றவர் பெற்றிடும் பேறே. (3)

# ஆசையெனும்

முன்னிலைச்சுட் டொழிதியெனப் பலகாலு
நெஞ்சேநான் மொழிந்தேனேநின்
றன்னிலையைக் காட்டாதே யென்னை யொன்றாச்
சூட்டாதே சரணன்போந்த
வந்நிலையே நிலையந்த நிலையிலே சித்திமுத்தி
யனைத்துந் தோன்று
நன்னிலையீ தன்றியிலை சுகமென்றே சுகர்
முதலோர் நாடினாரே. (1)

கேவல சகல மின்றிக் கீழொடு மேலா யெங்கு
மேவிய வருளின் கண்ணாய் மேவிட மேலாயின்பந்
தாவிட வின்பா தீதத் தனியிடை யிருத்தி வைத்த
தேவெனு மௌனிசெம் பொற் சேவடி சிந்தை செய்வாம்.

குலமிலான் குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமிலான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்து
இலமிலான் மைந்தர் மனைவி யில்லானெவ னவன்சஞ்
சலமிலான் முத்தி தரும்பர சிவனெனத் தகுமே. (3)

நானெனவு நீயெனவு மொருதன்மை
நாடாமல் நடுவே சும்மா
தானமரு நிலையிதுவே சத்தியஞ்சத்
தியமெனநீ தமிய னேற்கு
மோனகுரு வாகியுங்கை காட்டினையேதிரும்
பவுநான் முளைத்துத் தோன்றி
மானதமார்க் கம்புரிந்திங் கலைந்தேனே
பரந்தேனே வஞ்ச னேனே. (4)

## எனக்கெனச்செயல்

எனக்கெ னச்செயல் வேறிலையாவு மிங்கொருநின்
றனக்கெனத்தகு முடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத்தகத்துள வழுக்கெலா மாற்றி யெம்பிரானீ
நினைத்த தெப்படியப்படி யருளுத னீதம். (1)

நெறிகடாம்பல பலவுமா யந்தந்த நெறிக்காஞ்
செறியுந் தெய்வமும் பலபலவாகவுஞ் செறிந்தா
லறியுந்தன்மையிங் காருனே யறிவினு லறிந்தோர்
பிரியுந்தன்மை யில்லாவகை கலக்கின்ற பெரியோய். (2)

## மண்டலத்தின்

மண்டலத்தின் மிசை யொருவன் செய்தவித்தை
யகோவெனவும் வாரணுதி
யண்டமவை யடுக்கடுக் காயந்தரத்தி
னிறுத்துமவ தானம்போல்
வெண்டரு நல்லகிலாண்ட கோடியைத்தன்
னருள்வெளியி லிலகவைத்துக்
கொண்டு நின்ற வற்புதத்தை யெவராலு
நிச்சயிக்கக் கூடா வொன்றை. (1)

## பாயப்புலி

சும்மாவிருக்கச் சுகஞ்சுகமென்று சுருதியெல்லாம்
அம்மாநிரந்தரஞ் சொல்லவுங்கேட்டு மறிவின்றியே
பெம்மான்மௌனி மொழியையுந் தப்பியென் பேதமையால்
வெம்மாயக் காட்டிலலைந்தே னந்தோவென் விதிவசமே. (1)

மாதத்தி லேயொரு திங்களுண் டாகி மடிவதைநின்
போதத்தி லேசற்றும் வைததிலே யேயென் றம் புன்மைநெஞ்சே
வேதத்தி லேதர்க்க வாதத்திலே விளங் காதுவிந்து
நாதத்தி லேயடங்கா தந்தவான் பொரு ளுடிக்கொள்ளே.

## உடல்பொய்யுறவு

### நேரிசை வெண்பா

ஏதுக்குச் சும்மா விருமனமே யென்றுனக்குப்
போதித்த வுண்மையெங்கே போகவிட்டாய்-வாதுக்கு
வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடி னுயேயுன்
புந்தியென்ன போதமென்ன போ. (1)

கற்கண்டோ தேனே கனிரசமோ பாலோவென்
சொற்கண்டா தேதெனநான் சொல்லுவேன்-விற்கண்ட
வான மதிகாண மவுனிமவு னத்தளித்த
தானமதி லூறுமமிர் தம். (2)

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ
லாருந் துறக்கை யரிதரிது—நேரே
மனத்துறவு மப்படியே மாணு விவற்றி
லுனக்கிசைந்த வாறென்றே யோர். (3)

## காடுங்கரையும்

காடுங்கரையு மனக்குரங்கு கால்விட்டோட
வதன்பிறகே
யோடுந்தொழிலாற் பயனுளதோ வொன்ருய்ப்
பலவா யுயிர்க்குயிரா

யாடுங்கருணைப் பரஞ்சோதி யருளைப்
பெறுதற் கன்புநிலே
தேடும்பருவ மிதுகண்டீர் சேர வாருஞ்
செகத்திரே. (1)

சைவசமய மேசமயஞ் சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே.

காகமுறவு கலந்துண்ணக் கண்டீரகண்டா காரசிவ
போகமெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிடநா மினியெடுத்த
தேகம்விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே.

கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறு
ரிற்புறத் தவரை நாடார் யாங்களு மின்ப வாழ்வுந்
தற்பொறி யாக நல்குந் தலைவநின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணா னந்த வாழ்வே.

## மலைவளர்காதலி

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கண் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனுந் திமிரமணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பா லம்மைநின் றருளிற்
கருத்தொன்று முண்டாகுமே

நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா னந்தவொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனு மகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூத னன்றங்கையே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத் லிப்பெ ணுமையே. (1)

மிடியிட்ட வாழ்க்கையா லுப்பிட்ட கலமெனவு
மெய்யெலா முள்ளுடைந்து
வீறிட்ட செல்வர்தந் தலைவாயில் வாசமாய்
வேதனைக ளுறவேதனுந்
துடியிட்ட வெவ்வினையை யேவினன் பாவிநான்
றொடரிட்ட தொழில்க ளெல்லாந்
துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுன்
றொண்டர்பணி செய்வ தென்றோ
அடியிட்ட செந்தமிழி னருமையிட் டாரூரி
லறிவையோர் பரவை வாயி
லம்மட்டு மடியிட்டு நடைநடந் தருளடிக
ளடியீது முடியீதென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே
வளமருவு தேவை யரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெ ணுமையே. (2)

## பெற்றவட்கே

பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெறும்பேதை யறிவளோ பேரா னந்த
முற்றவர்க்கே கண்ணீர்க்கம் பலையுண் டாகும்
உறாதவரே கன்னெஞ்ச முடைய ராவார். (1)

திகையாதோ வெந்நாளும் பேரா னந்தத்
தெள்ளமுத முதவாமற் றிவலை காட்டி
வகையாக வலக்கழித்தா யுண்டு டுத்து
வாழ்ந்தேனு னிரண்டுகோன் மாடு போல. (2)

## கல்லாலின்

கல்லாலி னீழறனி லொருநால் வர்க்குங்
கடவுணீ யுணர்த்துவதுங் கைகாட் டென்றாற்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
அரும்புபற்றிக் கடல்கடக்குந் துணியே யன்றோ. (1)
தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாண் முக்கட்
செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப்பாக
மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கே
மூடனேன் புலம்பியசொன் முற்றுமோதான். (2)

## பராபரக்கண்ணி

ஆரா வமுதே யரசேயா னந்தவெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே. (1)
முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தேயென் னுள்ளத் தெளிவே பராபரமே. (2)
கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே யானந்த வியப்பே பாராபரமே. (3)
பார்த்தவிட மெல்லாம் பரவெளியாய்த் தோன்றவொரு
வார்த்தைசொல்ல வந்த மனுவே பராபரமே. (4)
அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே யிறையே பராபரமே. (5)

ஓடு மிருகிதியு மொன்ருகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே. (6)

முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே. (7)

என்புருகி நெஞ்ச மிளகிக் கரைந்துகரைந்து
அன்புருவாய் நிற்க வலேந்தேன் பராபரமே. (8)

மாருவனுபூதி வாய்க்கி னல்லா லென்மயக்கந்
தேருதென் செய்வேன் சிவமே பராபரமே. (9)

தாகமறிந் தின்பகிட்டை தாராயே லாகெடுவேன்
தேகம் விழிந்திடினென் செய்வேன் பராபரமே. (10)

பாராயோ வென்னேமுகம் பார்த்தொருகா லென்கவலே
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே. (11)

ஓயாதோ வென்கவலே யுள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே. (12)

கடலமுதே தேனேயென் கண்ணே கவலேப்
படமுடியா தென்னேமுகம் பார்நீ பராபரமே. (13)

எண்ணுத வெண்ணமெலா மெண்ணியெண்ணி யேழைநெஞ்சம்
புண்ணுகச் செய்ததினிப் போதும் பராபரமே. (14)

எத்தனே தான் சன்மமெடுத் தெத்தனே தான் பட்டதுயர்
அத்தனேயு நீயறிந்த தன்ருே பராபரமே. (15)

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருப்பதற்கே
அல்லும் பகலுமெனக் காசை பராபரமே. (16)

கண்ணுவா ரேனுமுனேக் கைகுவியா ராயினந்த
மண்ணுவார் நட்டை மதியேன் பராபரமே. (17)

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே. (18)

எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே. (19)

எத்தன்மைக் குற்ற மியற்றிடினுந் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்னருளு மன்றோ பராபரமே. (20)

எங்கெங்கே பார்த்தாலு மெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ யன்றோ பராபரமே. (21)

எச்சிலென்று பூவை யிகழ்ந்தோர்க் குனைப்போற்றப்
பச்சிலையுங் கிள்ளப் படுமோ பராபரமே. (22)

அந்தக் கரண மடங்கத் துறப்பதுவே
யெந்தத் துறவினுநன் றெந்தாய் பராபரமே. (23)

தன்னை யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே. (24)

தன்னை யறிந்தருளே தாரகமா நிற்பதுவே
யுன்னை யறிதற் குபாயம் பராபரமே. (25)

வான்காண வேண்டின் மலையேற லொக்குமுன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம் பராபரமே. (26)

விளக்குந் தகளியையும் வேறென்னா ரின்னைத்
துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே. (27)

பாராதி நீயாப் பகர்ந்தா லகமெனவும்
ஆராயுஞ் சீவனுநீ யாங்காண் பராபரமே. (28)

வருவான்வந் தேனெனல்போன் மன்னியழி யுஞ்சகத்தைத்
தெரிவாக வில்லையென்ற தீரம் பராபரமே. (29)

மாயா சகமிலேயேன் மற்றெனக்கோர் பற்றுமிலே
நீயேநா னென்றுவந்து நிற்பேன் பராபரமே. (30)

வானாதி நீயெனவே வைத்தமறை யென்னையுநீ
தானாகச் சொல்லாதோ சாற்றாய் பராபரமே. (31)

பாரறியா தண்டப் பரப்பறியா துன்பெருமை
யாரறிவார் நானோ வறிவேன் பராபரமே. (32)

என்போ லெளியவரு மெங்கெங்கும் பார்த்தாலு
முன்போல் வலியவரு முண்டோ பராபரமே. (33)

செப்புவதெல்லாஞ்செப்பநான் சிந்திப்ப தெல்லாநின்
னொப்பி றியானமென வோர்ந்தேன் பராபரமே. (34)

ஆரிருந்தென் னார்போயென் னாரமுதா நின்னருளின்
சீரிருந்தா லுய்வேன் சிவமே பராபரமே. (35)

வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி யுனையடைந்தே னையா பராபரமே. (36)

மார்க்கண்டர்க் காக மறலிபட்ட பாட்டையுன்னிப்
பார்க்கினன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே. (37)

ஆடுவதும் பாடுவது மானந்த மாகநின்னைத்
தேடுவது நின்னடியார் செய்கை பராபரமே. (38)

பொங்கியநின் றண்ணருளைப் புட்கலமாப் பெற்றவர்கட்
கெங்கெழுந்தேன் ஞாயி றியம்பாய் பராபரமே. (39)

பாலரொடு பேயர்பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே. (40)

உண்டுடுத்துப் பூண்டிங் குலகத்தார் போற்றிரியுந்
தொண்டர்விளை யாட்டே சுகங்காண் பராபரமே. (41)

காயநிலை யல்லவென்று காண்பா ருறங்குவரோ
தூயவருட் பற்றுத் தொடர்வார் பராபரமே. (42)

அப்புமுப்பும் போன்ற வயிக்கியபரா னந்தர்தமக்
கொப்புவமை சொல்லவும்வா யுண்டோ பராபரமே. (43)

சிந்தந் தெளிந்து சிவமானோ ரெல்லோர்க்குங்
கொத்தடிமை யான குடிநான் பராபரமே. (44)

தம்முயிர்போ லெல்லுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே. (45)

நெஞ்சகமே கோயி னினைவே சுகந்தமன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே. (46)

அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே. (47)

மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே. (48)

விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே. (49)

இன்றோ விருவினைவந் தேறியது நானென்றோ
அன்றே விளைந்ததன்றோ வாற்றேன் பராபரமே. (50)

எண்ணமுந்தா னின்னைவிட வில்லையென்றால் யான்முனமே
பண்ணவினை யேது பகராய் பராபரமே. (51)

என்னையின்ன தென்றறியா வேழைக்கு மாகெடுவேன்
முன்னைவினை கூடன் முறையோ பராபரமே. (52)

சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே. (53)

வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போற் பாழ்த்தமனம்
ஏதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே. (54)

கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனந் துள்ளுவதென் கண்டோ பராபரமே. (55)

வந்ததையும் போனதையும் வைத்துவைத்துப் பார்த்திருந்தாற்
சிந்தை யிதாகிதஞ் சேரும் பராபரமே. (56)

ஏறுமயிர்ப் பாலமுணர் விந்தவிட யங்கணொருப்
பாறெனவு நன்று வறிந்தேன் பராபரமே. (57)

எந்தவுட லேனு மெடுத்தவுட னல்லதென்று
சிந்தைசெய வந்ததிறம் செப்பாய் பராபரமே. (58)

பொய்யெல்லா மொன்றுப் பொருத்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றுன் மெய்யாய் விடுமோ பராபரமே. (59)

நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிகன் னூற் போதம் பராபரமே. (60)

சின்னஞ் சிறியார்கள் செய்தமணற் சோற்றை யொக்கும்
மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே. (61)

கேட்டதையே சொல்லுங் கிளிபோல நின்னருளின்
நாட்டமின்றி வாய்பேச னன்றோ பராபரமே. (62)

கொல்லா விரதமென்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரே வறியேன் பராபரமே. (63)

சித்திரையிற் செத்தபிண நேருமுடற் கிச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே. (64)

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னுர் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே. (65)

முத்தியிலுந் தேகமிசை மூவிதமாஞ் சித்திபெற்றோர்
எத்தனைபே ரென்றுரைப்ப தெந்தாய் பராபரமே. (66)

நீயன்றி நானார் நினைவாரென் னெஞ்சகமார்
தாயன்றிச் சூலுமுண்டோ சாற்றாய் பராபரமே. (67)

எக்கலையுங் கற்றுணர்ந்தோ மென்றவர்க்குஞ் சம்மதஞ்சொல்
வக்கணையா லின்பம் வருமோ பராபரமே. (68)

கல்லெறியப் பாசி கலைந்துநன்னீர் காணுநல்லோர்
சொல்லுணரின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே. (69)

நின்னையுணர்ந் தோர்கடமை நிந்தித்த பேயறிஞர்
என்ன கதிபெறுவா ரெந்தாய் பராபரமே. (70)

சோற்றுத் துருத்திச் சுமைசுமக்கத் தண்பிதுங்கக்
காற்றைப் பிடித்தலைந்தேன் கண்டாய் பராபரமே. (71)

உள்ளமறி யாதொருவ ரொன்றையுன்னிப் பேசிலையோ
துள்ளியிளங் கன்றாய்த் துடிப்பேன் பராபரமே. (72)

மூர்த்தியெல்லாம் வாழி யெங்கண் மோனகுரு வாழியருள்
வார்த்தையென்றும் வாழியன்பர் வாழி பராபரமே. (73)

தேடுந் திரவியமுஞ் சேர்ந்தமணிப் பெட்டகமுங்
கூட வருந்துணையோ கூறாய் பராபரமே. (74)

தேடாத தேட்டினரே செங்கைத் துலாக்கோல் போல்
வாடாச் சமநிலையில் வாழ்வார் பராபரமே. (75)

ஆசையுன்மீ தல்லா லருளறிய வேறுமொன்றிற்
பாசம்வையே னின்கருணைப் பாங்காற் பராபரமே. (76)

படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்றுச் சிந்தைத்
துடிப்பற்றோர்க் கன்றோ சுகங்காண் பராபரமே. (77)

நாவழுத்துஞ் சொன்மலரோ நாளுதிக்கும் பொன்மலரோ
தேவையுனக் கின்னதென்று செப்பாய் பராபரமே. (78)

ஐவரொடுங் கூடாம லந்தரங்க சேவைதந்த
தெய்வ வறிவே சிவமே பராபரமே. (79)

உண்டுபோ லின்று மூலகைத் திரமெனவுட்
கொண்டுநான் பெற்றபலன் கூருய் பராபரமே. (80)

பொய்குவித்த நெஞ்சனருட் பொற்பறிந்து திக்கனைத்துங்
கைகுவித்து நிற்பதெந்தக் காலம் பராபரமே. (81)

சொல்விற் பதர்களைந்து சொன்முடிவு காணுதார்
நெல்விற் பதர்போல நிற்பார் பராபரமே. (82)

பிடித்ததையே தாபிக்கும் பேரா ணவத்தை
அடித்துத் துரத்தவல்லா ரார்காண் பராபரமே. (83)

கற்பனையாய் பாடுகின்றேன் கண்ணீருங் கம்பலையுஞ்
சொற்பனத்துங் காணேனென் சொல்வேன் பராபரமே. (84)

தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போ லெவ்விடத்தும்
நீயிருந்து நான்றளர்ந்து நின்றேன் பராபரமே. (85)

வாயாற் கிணறுகெட்ட வாறேபோல் வாய்பேசிப்
பேயானுர்க் கின்பமுண்டோ பேசாய் பராபரமே. (86)

பாவமென்று லேதும் பயமின்றிச் செய்யவிந்தச்
சீவனுக்கார் போதந் தெரித்தார் பராபரமே. (87)

உள்ளங் குழைய வுடல்குழைய வுள்ளிருந்த
கள்ளங் குழையவென்று காண்பேன் பராபரமே. (88)

பாட்டுக்கோ வன்பினுக்கோ பத்திக்கோ வன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாங்குறுகி நின்றாய் பராபரமே. (89)

பத்தர்சித்தர் வாழிபரி பக்குவர்கள் வாழி செங்கோல்
வைத்தவர்கள் வாழிகுரு வாழி பராபரமே. (90)

கல்லாதே னானுங் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே. (91)

மண்ணு மறிகடலு மற்றுளவு மெல்லாமுன்
கண்ணி லிருக்கவுநான் கண்டேன் பராபரமே. (92)

---

## பைங்கிளிக்கண்ணி

ஆருமறி யாமலென்னை யந்தரங்க மாகவந்து
சேரும் படியிறைக்குச் செப்பிவா பைங்கிளியே. (1)

உன்னும லொன்றிரண்டென் றோராமல் விட்டுநெறி
சொன்னான் வரவும்வகை சொல்லாய்நீ பைங்கிளியே. (2)

ஊருமிலார் பேருமிலா ருற்றார்பெற் றாருடனே
யாருமிலா ரென்னை யறிவாரோ பைங்கிளியே. (3)

எந்த மடலூடு மெழுதா விறைவடிவைச்
சிந்தைமட லாவெழுதிச் சேர்ப்பேனோ பைங்கிளியே. (4)

ஏடார் மலர்சூடே னெம்பெருமான் பொன்னடியாம்
வாடா மலர்முடிக்கு வாய்க்குமோ பைங்கிளியே. (5)

கல்லேன் மலரேன் கனிந்தவன்பே பூசையென்ற
நல்லோர்போல் லாவெனையு நாடுவரே பைங்கிளியே. (6)

காந்த மிரும்பைக் கவர்ந்திழுத்தா லென்னவருள்
வேந்த னெமையிழுத்து மேவுவனோ பைங்கிளியே. (7)

கூறுங் குணமுமில்லாக் கொள்கையினு ரென்கவலை
யாறும் படிக்கு மணைவாரோ பைங்கிளியே. (8)

தற்போதத் தாலே தலைகீழ தாகவையன்
நற்போத வின்புவர நாட்செலுமே பைங்கிளியே. (9)

தாவியதோர் மார்க்கடமாந் தன்மை விட்டே யண்ணலிடத்
தோவியம்போ னிற்கினெனை யுள்குவரோ பைங்கிளியே. ()

பன்முத் திரைச்சமயம் பாழ்படக்கல் லாலடிவாழ்
சின்முத் திரையரசைச் சேர்வேனோ பைங்கிளியே. (11)

பொய்க்கூடு கொண்டு புலம்புவனோ வெம்மிறைவர்
மெய்க்கூடு சென்று விளம்பிவா பைங்கிளியே. (12)

மண்ணுறங்கும் விண்ணுறங்கு மற்றுளவெ லாமுறங்குங்
கண்ணுறங்கே னெம்மிறைவர் காதலாற் பைங்கிளியே. (13)

விண்ணவர்தம் பாலமுதம் வேப்பங்கா யாகவென்பாற்
பண்ணியதெம் மண்ணன்மயல் பார்த்தாயோ பைங்கிளியே.

## எந்நாட்கண்ணி

### தெய்வவணக்கம்

நீர்பூத்த வேணி நிலவெறிப்ப மன்றுடுங்
கார்பூத்த கண்டனையான் காணுநா ளெந்நாளோ. (1)

ஆறு சமயத்து மதுவதுவாய நின்றிலங்கும்
வீறுபரை திருத்தாண் மேவுநா ளெந்நாளோ. (2)

அஞ்சுமுகங் காட்டாம லாறுமுகங் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ. (3)

தந்தையிரு தாடுணித்துத் தம்பிரானருள் சேர்ந்த
எந்தையிரு தாளிணைக்கே யின்புறுவ தெந்நாளோ. (4)

## குருமரபின் வணக்கம்

பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ. (1)

பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ. (2)

சிற்றம்பல மன்னுஞ் சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநா ளெந்நாளோ. (3)

குறைவிலருண் ஞானமுதல் கொற்றங் குடியடிகள்
நறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ. (4)

நாளவங்கள் போகாம னன்னெறியைக் காட்டியெமை
யாளவந்த கோலங்கட் கன்புவைப்ப தெந்நாளே. (5)

என்னறிவை யுள்ளடக்கி யென்போல் வருமவுனி
தன்னறிவுக் குள்ளேநான் சாருநா ளெந்நாளோ. (6)

## அடியார்வணக்கம்

வெம்பந்த தீர்த்துலகாள் வேந்தன் றிருஞான
சம்பந் தனையருளாற் சாருநா ளெந்நாளோ. (1)

ஈரின் சிவபோக மிங்கிவற்கே யென்னவுழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ.

பித்தரிறை யென்றறிந்து பேதைபாற் றூதனுப்பு
வித்ததமிழ்ச் சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ. (3)

போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூ ரையனன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ. (4)

ஓட்டுடன் பற்றின்றி யுலகைத் துறந்த செல்வ
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ. (5)

கண்டதுபொய் யென்றகண்டா காரசிவ மெய்யனவே
விண்டசிவ வாக்கியர்தாண் மேவுநா ளெந்நாளோ. (6)

சக்கர வர்த்தி தவராச யோகியெனும்
மிக்கதிரு மூலனருண் மேவுநா ளெந்நாளோ. (7)

கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
எந்தையரு ணடி யிருக்குநா ளெந்நாளோ. (8)

எண்ணரிய சித்த ரிமையோர் முதலான
பண்ணவர்கள் பத்தரருள் பாலிப்ப தெந்நாளோ. (9)

---

## மாதரைப்பழித்தல்

திண்ணியநெஞ் சப்பறவை சிக்கக் குழற்காட்டிற்
கண்ணிவைப்போர் மாயங் கடக்குநா ளெந்நாளோ. (1)

ஆழ்சுழி யென்ன வளவுபடா வஞ்சனெஞ்சப்
பாழான மாதர்மயற் பற்றொழிவ தெந்நாளோ. (2)

ஏழைக் குறும்புசெயு மேந்திழையார் மோசமெனும்
பாழைக் கடந்து பயிராவ தெந்நாளோ. (3)

---

## அருளியல்பு

கன்றுமன வெப்பக் கலக்கமெலாந் தீரவருட்
டென்றல்வந்து வீசவெளி சேருநா ளெந்நாளோ. (1)

கட்டுநமன் செங்கோல் கடாவடிக்குங் கோலாக
வெட்ட வெளிப்பொருளை மேவுநா ளெந்நாளோ. (2)

சாலக் கபாடத் தடைதீர வெம்பெருமான்
ஓலக்க மண்டபத்து ளோடுநா ளெந்நாளோ. (3)

## அன்பர்நெறி

பாக்கியங்க ளெல்லாம் பழுத்தும னம்பழுத்தோர்
நோக்குந் திருக்கூத்தை நோக்குநா ளெந்நாளோ. (1)

## நிற்குநிலை

கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்தம்நாப்போல
விருப்புவட்டா வின்புருவை மேவுநா ளெந்நாளோ. (1)

## பாடுகின்றபனுவல்

பாடுகின்ற பனுவலோர்கள்
தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றி
லாடுகின்ற வழகனே. (1)

அத்தனென்ற நின்னையே
பத்திசெய்து பனுவலாற்
பித்தனின்று பேசவே
வைத்ததென்ன வாரமே. (2)

சித்தையன்பு சேரவே
வைத்துநின்னை நாடினேன்
வந்துவந்து வின்பமே
தந்திரங்கு தாணுவே. (3)

அண்டரண்டம் யாவுநீ
கொண்டுநின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகணீர்
கண்டநெஞ்சு கரையுமே. (4)

அன்னைபோல வருண்மிகுத்து
மன்னுஞான வரதனே
யென்னையே யெனக்களித்த
நின்னையானு நினைவனே. (5)

## ஆனந்தக்களிப்பு

சங்கர சங்கர சம்பு - சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.
பாராதி பூதநீ யல்லை உன்னிப்
பாரிந்தி ரியங் கரணநீ யல்லை
யாரா யுணர்வுநீ யென்றான் ஐய
னன்பா யுரைத்தசொல் லானந்த தோழி.
சங்கர சங்கர சம்பு. (1)

இறப்பும் பிறப்பும் பொருந்த எனக்
கெவ்வணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கின்
மறப்பு நினைப்புமாய் நின்ற வஞ்ச
மாயாமனத்தால் வளர்ந்தது தோழி.
சங்கர சங்கர சம்பு. (2)

அருளா லெவையும்பா ரென்றான் — அத்தை
யறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால் — கண்ட
வென்னையுங் கண்டில னென்னேடி தோழி.
சங்கர சங்கர சம்பு. (3)

என்னையுந் தன்னையும் வேறா — உள்ளத்
தெண்ணாத வண்ண மிரண்டற நிற்கச்
சொன்னது மோவொரு சொல்லே — அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்வேன்?
சங்கர சங்கர சம்பு. (4)

Q2:417 N27

என்றுமழியுமிக் காயம் — இத்தை
யேதுக்குமெய்யென் றிருந்தீ ருலகீர்
ஒன்றுமறியாதீரோ — யம
னோலைவந்தாற் சொல்ல வுத்தரமுண்டோ?
சங்கர சங்கர சம்பு. (5)

வேண்டா விருப்பும் வெறுப்பும் — அந்த
வில்லங்கத் தாலே விளையுஞ் சனனம்
ஆண்டா னுரைத்த படியே — சற்றும்
அசையா திருந்துகொள் ளறிவாகிநெஞ்சே
சங்கர சங்கர சம்பு. (6)

தாயுமானசுவாமிகள் பாடல்
திரட்டு
முற்றிற்று.

97159

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபாற்கூலி யுட்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ... | ரூ. 2 0 0 |
| தனிச் சஞ்சிகை ... ... | விலை | ரூ. 0 2 6 |

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக் கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப் படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத் தொகையை முன்னுடிசெலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதால் அணு மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு எற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ... | ரூபா | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, ... | ரூபா | 5—0—0 |

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

6A
115

# क्रय्यसंस्कृतपुस्तकानि.

| | | |
|---|---|---|
| संस्कृतबालशिक्षा | ० | ३ |
| सरस्वतीप्रार्थना, श्यामला-दण्डकं, नवरत्नमाला च | ० | २ |
| शब्दमंजरी (दृढपत्रात्मिका) | ० | ६ |
| यजुर्वेदसन्ध्यावन्दनम् | ० | २ |
| आदित्यहृदयम् | ० | १ |
| महाकवि बोधायनकृत-भगवदज्जुकनाटकम् | ० | ६ |
| शिवानन्दलहरी | ० | २ |
| रुद्रनमकचमकम् | ० | २ |
| सौन्दर्यलहरी | ० | २ |
| पञ्चसूक्तानि | ० | २ |
| रामकर्णामृतम् | ० | ८ |
| बालरामायणम् | ० | २ |
| विवेकचूडामणिः | ० | ८ |
| श्रीकृष्णकर्णामृतम् | ० | ६ |
| ,, आंग्लानुवादसहितम् | १ | ८ |
| शिवकवचम् | ० | २ |
| यजुर्वेदाह्निकम् | ० | ६ |
| श्रीवैष्णवाह्निकम् | ० | ८ |
| सूर्यनमस्कारमन्त्राः त्र्यृच-ब्रह्मयज्ञसहितास्सस्वराश्च | ० | १ |
| लक्ष्मीनृसिंहस्तोत्रम् | ० | १ |
| मुकुन्दमाला | ० | १ |

| | | |
|---|---|---|
| बृहत्स्तोत्ररत्नाकरम् | | ... |
| भगवद्गीता मूलमात्रम् | ० | ४ |
| श्रीगोविन्दद्वादश (चतुर्दश) मञ्जरिकास्तोत्रम् | ० | १ |
| हिन्दी तेलुगु बालशिक्षा | ० | ३ |
| ,, प्रथमवाचकम् | ० | ८ |
| भर्तृहरिशतकत्रयम्, मूलम् | ० | ८ |
| विक्रमार्कचरित्रम् | ० | १० |
| संस्कृतान्ध्रवर्णबोधिनी, पत्रफलका | ० | २ |
| श्रीलक्ष्मीनारायणहृदयम् | ० | ३ |
| ब्रह्मसूत्राणि, मूलम् | ० | ३ |
| श्रीदक्षिणामूर्तिस्तोत्रम् | ० | १ |

॥ नामावलीसहितानि ॥

| | | |
|---|---|---|
| विष्णुसहस्रनामस्तोत्रम् | ० | ४ |
| ललितासहस्रनामस्तोत्रम् | ० | ६ |
| लक्ष्मीसहस्रनामस्तोत्रम् | ० | ४ |
| सुब्रह्मण्यसहस्रनामस्तोत्रम् | ० | ४ |
| शिवसहस्रनामस्तोत्रम् | ० | ४ |
| वेङ्कटेशसहस्रनामस्तोत्रम् | ० | ४ |
| अन्नपूर्णासहस्रनामस्तोत्रम् | ० | ४ |
| आंजनेयसहस्रनामस्तोत्रम् | ० | ४ |
| गणपतिसहस्रनामस्तोत्रम् | ० | ४ |

वाविळ्ळ रामस्वामि शास्त्रुलु अण्ड् सन्स्,

२९२, एस्प्लनेड्, चेन्नपुरी.